1973 மார்ச் 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தந்தக் கல்வித் துறைக்கு அவர்கள் விண்ணப்பித்தால், அந்தந்தக் கல்வித் துறை அது குறித்து இன்னும் ஒதுக்கலாம். சர்வகலாசாலையில் அதிக இடம் ஒதுக்க சங்கடம் இருக்காது. மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவற்றிற்கு அவர்கள் விண்ணப்பித்தால், அவர்கள் நிலைமைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்ப முடிவு எடுக்கலாம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, தாயகம் திரும்பிய பர்மா, இலங்கை அகதிகளுக்கு இப்போது கல்லூரிகளில் அளிக்கப்படுகின்ற இடங்களை அதிகப்படுத்துவதோடு, அவர்களுக்குப் பணமாக உதவி செய்வதற்கும் அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படியில்லையென்றால், அதைச் செய்து தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எனனைப் பொறுத்தவரையில், கல்வித் துறையில் என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன என்பதுதான் தெரியும். அவர்களுக்குப் பொருளாதார வசதிகள், மற்ற மற்ற வசதிகள் எல்லாம் அதற்கென்று இருக்கும் துறைகளில் கவனிக்கப்பட்டு வருகின்றன. அந்தத் துறைகள் சில பல வசதிகளைச் செய்து தருகின்றன.

வேலம்பாளையத்திலுள்ள தனியார் பள்ளி.

*344 வினா :—திரு சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971-ம் ஆண்டில், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 15 வேலம்பாளையத்தில் உள்ள தனியார் பள்ளியை அரசு பள்ளியாக மாற்ற வேண்டும் எனக் கேட்டு பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

மனிதச் சக்தியைப் பயன்பெறும் திட்டத்தின்கீழ் பணிகள்.

*345 வினா :—திரு நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 70-71, 71-72-ம் ஆண்டுகளில் மனிதச் சக்தியைப் பயன்பெறும் திட்டத்தின்கீழ் (R.M.P.) வேலை எதேனும் மேற்கொள்ளப்பட்டதா?